# ??????????? ?????????????? ???? ???????



ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் முன்னால் தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசியக் கொடியை ஏற்ற அனுமதிக்கப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளின் இயக்கத்தை தடை செய்திருந்தாலும், சுவிஸ் பொலிஸார் புலிகளின் கொடியை ஏற்றுவதை நிறுத்தவில்லை.

அந்த வகையில் மனித உரிமைகள் பேரவையின் முன் இந்த கொடி ஏற்றப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையும் புலிகளின் கொடியை ஏற்றியதற்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.

---

# ???????????? ??????? ??????? ??????????

# ??????????!







மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த உண்ணாவிரதப் பந்தலை அகற்றி பொலீசார் அட்டகாசம் செய்துள்ளனர்.

சட்டத்தை மதித்து வீதி ஓரத்தில் யாருக்கும் எந்த வித பாதிப்பும் இன்றி அகிம்சை ரீதியாக முன்னெடுக்கப்படும் போராட்டத்தை அச்சுறுத்தும் வகையில் தொடர்ச்சியாக மட்டக்களப்பு மாவட்ட பொலீசார் செயற்பட்டு வருகின்றனர்.

அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்ட மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் நடைபெற்று வரும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை முடக்கும் நோக்கில் தொடர்ச்சியாக நீதிமன்ற தடை உத்தரவுகளை பெற்று வந்த மட்டக்களப்பு மாவட்ட பொலீசார் இரவோடு இரவாக உண்ணாவிரதப் போராட்டம் இருந்து வந்த பந்தலை அகற்றி அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பொலீசாரிடம் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் கிழக்கு மாகாண பிரதிநிதிகள் முறைப்பாடு செய்யச் சென்ற போது நீதிமன்ற

கட்டளையின் பிரகாரம் உண்ணாவிரதப் பந்தலை அகற்றியதாக பொலீசார் தெரிவித்துள்ளனர்.





---

## [illegible]



## [illegible]




இணைத்தின் ஊடாக பொருட்ளை விற்பனை செய்யும் புகழ்பெற்ற நிறுவனம் ஒன்று இலங்கை தேசிய கொடியின் உருவத்துடனான கால் துடைப்பான் மற்றும் பாதணிகளை அதன் இணையதளத்தில் விற்பனைக்காக பதிவிட்டுள்ளது.

அமெரிக்காவை தளமாகக்கொண்ட Amazon இணையதளத்திலேயே குறித்த பொருட்கள் விற்பனைக்காக

பதிவிடப்பட்டுள்ளது. குறித்த பொருட்களை இலங்கையர்களும் பெற்றுக் கொள்ளும் வண்ணம் வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது.

12 அமெரிக்க டொலருக்கு குறித்த கால் துடைப்பானை விற்பனைக்கு பதிவிட்டுள்ளதுடன் அதற்கான விநியோக கட்டணமாக 9 டொலர்கள் அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் பாதணிகள் 20 டொலருக்கு விற்பனைக்காக பதிவிடப்பட்டுள்ளதுடன் அதற்கான விநியோக கட்டணமாக 10 டொலர்கள் அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

---

# ??????????? ???????????? ?????????????????? ????????? ???????? ???????



அம்பிகையின் அறப்போராட்டத்திற்கு வலுச்சேர்க்க நாளை மறுதினம் பிரித்தானியாவில் நடைபெறவுள்ள மாபெரும் எழுச்சிப்பேரணிக்கு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமானும் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ் மக்களுக்கான சர்வதேச நீதி கோரி திருமதி அம்பிகை செல்வக்குமார் முன்னெடுத்துவரும் அகிம்சைவழியிலான உண்ணாவிரதப்போராட்டம் இன்றுடன் இரு வாரங்களை (14 நாட்கள்) அடைகின்ற.

அந்தவகையில் அம்பிகையின் போராட்டத்திற்கு வலுச்சேர்த்து பிரித்தானிய அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை Kenton Road, Harrow, HA3 9NR எனும் இடத்திலிருந்து மதியம் 12 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையிலேயே இந்த எழுச்சிப்பேரணிக்கு அரசியல், அமைப்பு, கட்சி வேறுபாடின்றி ஒன்று திரளுமாறு அவர் புலம்பெயர் தமிழர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

https://youtu.be/aWPjz5k_zlk

---

## ??? ????????????? ????????????? ??????????




## ???????????????????? ??????????????????? ????????




இலங்கையில் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் மக்களிற்கு சர்வதேச நீதி கோரி ஒட்டுமொத்த தமிழர்கள் சார்பில் திருமதி அம்பிகை செல்வக்குமார் முன்னெடுத்துள்ள அறப்போர் இன்றுடன் இருவாரங்களை (14) அடைந்துள்ளது.

மௌனம் காத்துவந்த பிரித்தானியா வலுவடைந்துள்ள அம்பிகையின் போராட்டத்தினைகண்டு மெல்ல தன் காதுகளை திறக்க ஆரம்பித்துவிட்டன.
பிரித்தானியாவின் தொழிற்கட்சி, மிதவாத ஜனநாயகக்கட்சி என கட்சிகளும் அம்பிகையின் கோரிக்கைரயை நிறைவேற்றவெண்டுமென ஆதரவுக்கரம் நீட்ட ஆரம்பித்துள்ளதுடன் அரசு சில நகர்வுகளை முன்னெடுக்க விளைந்துள்ளன.


இந்நிலையில், அம்பிகையின் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் ஒவ்வொருநாளும் நடைபெறும் மெய்நிகர் எழுச்சி நிழகழ்வு வழமைபோல் இன்று பிரித்தானிய நேரம் பி.ப.3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மும்மதத் தலைவர்களின் ஆசியுரைகளுடன் ஆரம்பமாகவுள்ள இன்றைய நிகழ்வில், பிரித்தானியாவின்தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு. சாம் ரெரி (Hon. Sam Terry, Member of Parliament, Ilford South, Labour Party), தாயகத்திலிருந்து தமிழ் மக்கள் கூட்டணியின் கொள்கைபரப்புசெயலாளரும் ஊடகப்பேச்சாளருமான திரு கந்தையா அருந்தவபாலன் மற்றும் ஈழவிடுதலை ஆதரவுக்காக பல ஆண்டுகளைசிறையில் கழித்த தமிழகம் புதுக்கோட்டை இரா.பாவாணன், ஆழ்கடல் மறவர்கள் சார்பில் முன்னாள் போராளி மணாளன், திருமதி கந்தசாமி அம்மா (கனடா) ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

இதேவேளை மிதவாத ஜனநாயக (Liberal Democrats) கட்சியின் தலைவராகிய Sir Ed Davey அவர்களால் ஐ.நா. விடயத்தில் இலங்கை தொடர்பில் அந்த கட்சியின் நிலைப்பாடு நேற்றய தினம் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக, வைத்திய கலாநிதி தேவா நாதன்அறிமுக உரையாற்வுள்ளார். தவிர, அம்பிகை செல்வகுமாரின் அறவழிப்போரின் சிறப்பை எடுத்துக்கூறும் விதமாக, எமது தாய் தமிழகத்தில் புகழேந்தி தங்கராஜ் தலைமையில் நேற்றய தினம் இடம்பெற்ற சிறப்பு கவியரங்கத்தின் சில காட்சிகளும் இறுதியாக தியாகம் திருமதி அம்பிகையின் சிறு உரையும்இடம்பெறவுள்ளன.

இதேவேளை, நேற்றைய 13 ஆவது நாள் மெய்நிகர் நிகழ்வு வேதாகம வித்தகர்" சிவஸ்ரீ சௌபாக்கிய. சசிகுமாரக்குருக்கள் யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தைஜெபரட்ணம் மௌலவி நிஷ்வான் ஆகிய மும்மத தலைவர்களின் ஆசியுரையுடன் ஆரம்பமானதுடன் உண்ணாவிரத களத்தில் இருந்து முன்னாள் போராளி திருமதி.விழியரசி, பிரான்சிலிருந்து அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவையின் செயலாளர் திரு. திருச்சோதி, பிரான்சிலிருந்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சர் திரு. சுதன்ராஜ் ஆகியோர் உரையாற்றினர்.

அவுஸ்திரேலியா தொழிற்கட்சியின் நியூ சவுத் வேல்ஸ் மாநில நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ Hugh Mc Dermott, அவுஸ்திரேலிய நியூ சவுத் வேல்ஸ் மாநில மேல் சபை நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ David Shoebridge ஆகியோர் அம்பிகையின் போராட்டம் குறித்து அனுப்பிவைத்த காணொளிகள் ஒளிபரப்பப்பட்டதுடன் தாய் தமிழகத்தில் இருந்து பேராசிரியர் கலாநிதி தமிழச்சி தங்கபாண்டியனின் உரையும் புகழேந்தி தங்கராஜ் தலைமையில் சிறப்பு கவியரங்கமும் சிறப்பு கவியரங்க காணொளியும் ஒளிபரப்பபட்டது.

- 


- 
Recording
Theanu
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave
- 
Recording
Chandhrika
திரு.வி.உ. இளவேனில்
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave

- 

Hunger Strike
திரு. தமிழ்மணவாளன்


- 

Recording
Hunger Strike
for Truth & Justice
Chandhrika
PULL
திரு. வே. எழிலரசு
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave


- 


Recording
Chandhrika
PULL
இயக்குனர் திரு.புகழேந்தி தங்கராஜ்
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave


- 

Recording
Chandhrika
கவிஞர் திரு.காசி ஆனந்தன்
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave

- 
- 
Recording
Theanu
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave

- 
Recording
UK! Do not betray Tamil victims of Genocide in Sri Lanka!
Hunger strike for Truth & Justice
Chandhrika
suthanraj
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave
- 
UK! Do not betray Tamil victims of Genocide in Sri Lanka!
Hunger strike for Truth & Justice

- 
- 
UK! Do not betray Tamil victims of Genocide in Sri Lanka!
Recommend Referral to International Criminal Court (ICC)
Create an International Impartial and Independent Mechanism (IIIM)
Appoint Permanent Rapporteur
UN sponsored referendum in the North and East of Sri Lanka
Hunger strike for Truth & Justice

- 


14 ஆவது நாளாகிய இன்றைய மெய்நிகர் நிகழ்வு வழமை போல் பிரித்தானிய நேரம் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்நிகழ்வில் நீங்களும்இணைந்து அம்பிகையின் போராட்டத்திற்கு ஆதரவு சேர்க்க பின்வரும் இணைப்பில் இணைந்துகொள்ளலாம்.

[illegible]
[illegible]

https://us02web.zoom.us/j/86153063444?pwd=U1ZiY1lIVjRtZmNwZUFWNGNzV1k1UT09

---

# [illegible]!




## – [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]




இலங்கை இனப்படுகொலைக்கு உள்ளான மக்களுக்கு சர்வதேச நீதி கோரி, தமிழர்கள் சார்பில் திருமதி அம்பிகை செல்வகுமார் அவர்கள் நாடத்திக்கொண்டிருக்கும் உணவு தவிர்ப்புப்போராட்டம் 13ம் நாளை அடைந்துள்ள நிலையில், பிரித்தானிய அரச தரப்பில் இருந்து புத்துணர்வு ஊட்டும் புதிய தகவல்கள் வெளியாகி

உள்ளன.

இது இந்த அகிம்சை போராட்டம் வெற்றிப்பாதையில் சென்று கொண்டிருப்பதை மீண்டும் நிரூபித்துள்ளதுடன், முழுமையான வெற்றி கிடைக்கும் வரை தொடரவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது.

உண்ணாவிரத போராட்டம் மற்றும் அதனால் மக்களிடம் இருந்து ஏற்பட்ட அழுத்தங்கள் காரணமாக, தமிழர் சார்பில் திருமதி அம்பிகை முன்வைத்த நான்கு கோரிக்கைகளில் மூன்றை பிரித்தானிய தொழிற்கட்சி (Labour Party) முழுமையாக அங்கீகரித்து தமது கொள்கை நிலைப்பாட்டை வெளியிட்டிருந்ததுடன், உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆளும் கட்சியை கடுமையாக வலியுறுத்தியிருந்தனர்.

தொழிற்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், நிழல் அமைச்சருமான கௌரவ ஸ்ரிபன் கினோக் (Shadow Minister, Foreign and Commonwealth Affairs) அவர்கள் எழுத்து மூலம் 08 மார்ச் 2021 அன்று இதனை வெளியிட்டிருந்தார்.

இதனைப்போலவே நேற்றய தினம், 11 மார்ச் 2021 திகதியிட்ட கடிதம் ஒன்றின் வாயிலாக, பிரித்தானியாவின் மிதவாத ஜனநாயக்க் கட்சி ((Liberal Democrats) தனது புதிய நிலைப்பாட்டையும் வெளியிட்டிருந்தது.

இந்தக் கட்சியின் தலைவரும், கிங்ஸ்டன் பகுதி பாராளுமன்ற உறுப்பினருமான, சேர் எட் டேவி (Sir Ed Davey) அவர்களால் கையொப்பமிடப்பட்டு பிரித்தானிய பிரதமருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில், ஐ.நா.வில் சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்தின் வரைவு தமிழ் மக்களுக்கு நீதி வழங்க தவறிவிட்டது என்று கடுமையாக சாடி உள்ளதுடன், திருமதி அம்பிகை செல்வகுமாரால் முன்வைக்கப்பட கோரிக்கைகளில் மூன்றை முழுமையாக ஆங்கீகரித்து, அவற்றை ஐ.நா. தீர்மானத்தில் உள்ளடக்கும்படியும் கோரியுள்ளது.

**Ed Davey MP**
Member of Parliament for Kingston and Surbiton

HOUSE OF COMMONS
LONDON SW1A 0AA

Rt Hon Boris Johnson MP
The Prime Minister
10 Downing Street
London, SW1A 2AA

11th March 2021

Dear Prime Minister,

I am writing to share my concerns about the draft resolution on Sri Lanka that the FCDO has tabled for approval by the UN Human Rights Council on 24th March.

Time and again, the UK has played a vital role in leading collective action on international accountability in Sri Lanka. At the 46th session of the UN Human Rights Council, which is currently underway, the UK has a real opportunity to continue in this proud tradition.

But unfortunately, the draft resolution completely fails to rise to this challenge. As it stands, the draft resolution is too vague and lacks robust commitment to international accountability mechanisms.

It also fails to incorporate the recommendations laid out in the UN High Commissioner for Human Rights' report on Sri Lanka that was published earlier this year. The High Commissioner portrayed a damning picture of the situation in Sri Lanka, making it clear that domestic mechanisms for reconciliation, accountability and human rights have drastically eroded in the past few years.

Many Tamil groups across the UK have been calling on your Government to take urgent action to ensure that the UN Human Rights Council resolution is robust enough to ensure that those responsible are held accountable for crimes and human rights abuses committed against the Tamils.

I am aware that the Sri Lanka Core Group will be meeting imminently, to discuss the draft resolution. As such, I am urging you to personally ensure that the draft resolution is immediately rewritten to:

- Include a recommendation to refer the Sri Lankan situation to the International Criminal Court to investigate and prosecute serious international crimes committed in Sri Lanka against the Tamils;

21 Berrylands Road, Surbiton, KT5 8QX | 0208 288 2736 | 0207 219 4530
edward.davey.mp@parliament.uk | www.eddavey.org
EdwardJDavey @EdwardJDavey

Namthu Eelanadu.com

**Ed Davey MP**
Member of Parliament for Kingston and Surbiton

HOUSE OF COMMONS
LONDON SW1A 0AA

- Establish a proper International Independent Investigative Mechanism relating to Sri Lanka to collect evidence and prepare files for prosecution;
- Incorporate the High Commissioner's recommendations from her January 2021 report, particularly her view that the principles of universal and extraterritorial jurisdiction must apply to the actions of the Sri Lankan government and military; and
- Take a strong stance on prevention, including tangible measures to support and protect civil society groups and human rights defenders who are working on the ground in Sri Lanka.

It has never been more important for the UK to lead strong collective action on accountability and reconciliation in Sri Lanka — and a comprehensive, robust Human Rights Council resolution is an important first step. I implore you to do everything in your power to make this happen.

Namunu Eelanadu.com

Thank you, and I hope to receive a positive reply from you soon.

Yours sincerely,

Ed Davey MP
Leader of the Liberal Democrats

CC Rt Hon Dominic Raab MP, Secretary of State for Foreign, Commonwealth and Development Affairs

21 Berrylands Road, Surbiton, KT5 8QX | 0208 288 2736 | 0207 219 4530
edward.davey.mp@parliament.uk | www.eddavey.org
EdwardJDavey @EdwardJDavey

▪

பிரித்தானிய, தொழில்கட்சி மற்றும் மிதவாத ஜனநாயக கட்சி என்பன எப்போதும் தமிழர்களுக்கு ஆதரவான கட்சியாக இருந்த போதிலும்இ இதுவரை இப்படியான கொள்கை நிலைப்பாட்டை இதுவரை அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சில புலம்பெயர் அமைப்புக்கள் பலவருடங்களாக தாம் பல இராஜ தந்திர நகர்வைகளை மேற்கொள்ளுவதாக உரிமை கோரிவரும் போதிலும், அவர்களால் இதுவரை இப்படியான நிலைப்பாட்டை எடுக்கச்செய்ய முடியவில்லை என்பதும், உண்ணாவிரத போராட்டத்தின் விளைவாகவே இந்த நிலைப்பாடுகள் எடுக்கப்பட்டன என்பதும் மறுக்கமுடியாத்து.

இதனால் இதனை இந்த உண்ணாவிரத அகிம்சை போராட்டத்தின் முதல்படி வெற்றியாகவே கருத வேண்டும். இதற்கு அடுத்தபடியாக இன்னும் புத்துணர்வு தரும் புதிய தகவல்கள் பிரித்தானிய அரச தரப்பில் இருந்து இன்று வெளியாகியுள்ளன.

வெளியாகியுள்ள திருத்தப்பட்ட இரண்டாவது வரைவில் உண்ணாவிரத போராட்டத்தின் கோரிக்கைகளில் ஒன்றாகிய, சர்வதேச சுயாதீன விசாரணை பொறிமுறை ஒன்றுக்கான அனைத்து அம்சங்களும் அடங்கிய புதிய பொறிமுறை உள்ளடக்கப்பட்டுள்ளது. இது IIIM அல்லது IIMM என்று வெளிப்படையாக பெயரிடப்படாவிட்டாலும், அதற்கு சமானமாகவும், அதற்குரிய அனைத்து கூறுகளை உள்ளக்கியதாகவும் இருப்பது தெளிவாகியுள்ளது.

மேற்படி தகவலை உறுதிப்படுத்தும் வகையில், இன்னுமொரு முக்கிய தகவல் வெளியாகி உள்ளது. உருவாக்கப்படவிருக்கும் சுயாதீன விசாரணைப் பொறிமுறையில் நியமிக்கப்படவுள்ள 6 – 8 நிபுணர்களுக்கு வருடத்துக்கு 2 மில்லியன் செலவு ஏற்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், அதனை பிரித்தானியா அரசு வழங்கவுள்ளதாகவும் அந்த தகவல் தெரிவிக்கின்றது.

தமிழர் பிரதிநிதிகளுக்கும் பிரித்தானிய அரசுக்குக்கும் நடைபெற்ற தொடர் கலந்துரையாடல்களிலும்இ உயர்மட்ட இராஜதந்திர அதிகாரி ஒருவர் மூலமும் மேற்படி தகவல் கிடைக்கபெற்றுள்ளது.

இது திருமதி அம்பிகை அவர்கள் மற்றும் அவர்களின் பின் அணிதிரண்டுள்ள தமிழ்மக்களுடைய அகிம்சைப்போராட்டத்திற்கு கிடைத்த முழுமையான வெற்றியாகும். அத்துடன் இந்த போராட்டம் வீணானது, கோரிக்கைகள் நடைமுறைச்சாத்தியம் அற்றவை என்று மக்களை தவறாக வழிநடத்திவந்த பிரித்தானிய தமிழர் பேரவை போன்ற அமைப்புகளுக்கு இது பெரும் செருப்படியாகவும் அமைந்துள்ளது.

எனினும் மேற்படி வரைபு உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுஇ ஐநாவில் சமர்ப்பிக்கப்படும் வரை இந்த போராட்டம் இன்னும் உத்வேகத்துடன் தொடர வேண்டும். எனவே முழுமான வெற்றியை ஈட்ட, இன்னும் அதிகமான அழுத்தங்களை பொதுமக்கள் பிரிந்தானிய அரசுக்கு பலவழிகளிலும் தொடர்ந்து வழங்க வேண்டும் என்று உண்ணாவிரத ஆதரவு அணியினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த அடிப்படையில் பிரித்தானியா வாழ் தமிழ் மக்கள் சுயமாக உணர்வெழுச்சியுடன் எதிர்வரும் நாளை மறுதினம் ஞாயிற்று கிழமை (14 .03.2021) கொவிட் விதிகளுக்கு உட்பட்டு, பாரிய எழுச்சிப் பேரணி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

**Ed Davey MP**
Member of Parliament for Kingston and Surbiton

HOUSE OF COMMONS
LONDON SW1A 0AA

Rt Hon Boris Johnson MP
The Prime Minister
10 Downing Street
London, SW1A 2AA

11th March 2021

Dear Prime Minister,

I am writing to share my concerns about the draft resolution on Sri Lanka that the FCDO has tabled for approval by the UN Human Rights Council on 24th March.

Time and again, the UK has played a vital role in leading collective action on international accountability in Sri Lanka. At the 46th session of the UN Human Rights Council, which is currently underway, the UK has a real opportunity to continue in this proud tradition.

But unfortunately, the draft resolution completely fails to rise to this challenge. As it stands, the draft resolution is too vague and lacks robust commitment to international accountability mechanisms.

It also fails to incorporate the recommendations laid out in the UN High Commissioner for Human Rights' report on Sri Lanka that was published earlier this year. The High Commissioner portrayed a damning picture of the situation in Sri Lanka, making it clear that domestic mechanisms for reconciliation, accountability and human rights have drastically eroded in the past few years.

Many Tamil groups across the UK have been calling on your Government to take urgent action to ensure that the UN Human Rights Council resolution is robust enough to ensure that those responsible are held accountable for crimes and human rights abuses committed against the Tamils.

I am aware that the Sri Lanka Core Group will be meeting imminently, to discuss the draft resolution. As such, I am urging you to personally ensure that the draft resolution is immediately rewritten to:

- Include a recommendation to refer the Sri Lankan situation to the International Criminal Court to investigate and prosecute serious international crimes committed in Sri Lanka against the Tamils;

Namthu Eelanadu.com

21 Berrylands Road, Surbiton, KT5 8QX | 0208 288 2736 | 0207 219 4530
edward.davey.mp@parliament.uk | www.eddavey.org
EdwardJDavey @EdwardJDavey

**Ed Davey MP**
Member of Parliament for Kingston and Surbiton

HOUSE OF COMMONS
LONDON SW1A 0AA

- Establish a proper International Independent Investigative Mechanism relating to Sri Lanka to collect evidence and prepare files for prosecution;

- Incorporate the High Commissioner's recommendations from her January 2021 report, particularly her view that the principles of universal and extraterritorial jurisdiction must apply to the actions of the Sri Lankan government and military; and

- Take a strong stance on prevention, including tangible measures to support and protect civil society groups and human rights defenders who are working on the ground in Sri Lanka.

It has never been more important for the UK to lead strong collective action on accountability and reconciliation in Sri Lanka — and a comprehensive, robust Human Rights Council resolution is an important first step. I implore you to do everything in your power to make this happen.

Thank you, and I hope to receive a positive reply from you soon.

Yours sincerely,

Ed Davey MP
Leader of the Liberal Democrats

CC Rt Hon Dominic Raab MP, Secretary of State for Foreign, Commonwealth and Development Affairs

Namthu Eelanadu.com

21 Berrylands Road, Surbiton, KT5 8QX | 0208 288 2736 | 0207 219 4530
edward.davey.mp@parliament.uk | www.eddavey.org
EdwardJDavey @EdwardJDavey